# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2016/2017 (நவம்பர்/டிசெம்பர் 2019)

## DTS 2223 Thenmody and Vadamody : Theatre Tradition

நேரம் : 02 மணித்தியாலங்கள்

**பகுதி – I இல் இருந்து இரண்டு வினாக்களுக்கும் பகுதி – II இல் இருந்து இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

### பகுதி – I

01. (1) பாரம்பரிய கூத்து என்றால் என்ன எனக் குறிப்பிட்டு, அதன் பண்பினை விளக்குக. (10 புள்ளிகள்)

(2) பாரம்பரியக் கூத்தின் "ஆற்றுகை மையக் கற்றலின்" முக்கியத்துவம் பற்றிய கருத்தியலை உமது அனுபவத்துடன் கருத்துரைக்குக. (10 புள்ளிகள்)

02. (1) பாரம்பரியக் கூத்தில் களரியடித்தலின் முக்கியத்துவம் பற்றி ஆராய்க. (10 புள்ளிகள்)

(2) கூத்தின் வரவு நிலையில் சபைவிருத்தம், சபைத்தரு, தரு ஆகிய யாப்பு விதிகளின் ஓட்டத்தினை உமது ஆற்றுகை அனுபவத்துடன் எடுத்துக்காட்டித் தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

03. நொண்டி நாடகம் தென்மோடிக் கூத்தினை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை மதிப்பிடுக.

(1) இக்கூத்தின் கட்டமைப்பு (10 புள்ளிகள்)

(2) இக்கூத்தில் வெளிப்படும் பெண்களின் முற்போக்குச் சிந்தனைகள் (10 புள்ளிகள்)

### பகுதி – II

04. "கூத்தின் ஆட்டக் கோலங்கள் அதன் ஆற்றுகையில் பிரதான பங்கு வகிக்கின்றது" இக்கூற்றினை நீர் பங்குகொண்டு ஆடிய கூத்தின் வரவு ஆட்டம், பாடலுக்கான ஆட்டக் கோலங்கள் ஆகியவற்றைக் கொண்டு சிபார்சு செய்க. (30 புள்ளிகள்)

05. "பாரம்பரியக் கூத்தின் தொடர் செயற்பாட்டின் மூலம் சமுதாய ஊடாட்டம் வலுப்பெறுகிறது" எனும் கூற்றினை உமது பங்குகொள் அனுபவத்தினூடாக ஆராய்க. (30 புள்ளிகள்)

06. கூத்தரங்கை "அடிப்புறத்தில் இருந்து அடிப்புறத்திற்கு" எனும் கருத்தியலின் மூலம் செயற்படுத்தும் போது உமக்கு ஏற்பட்ட தாக்கத்தின் பிரதிபலிப்பை எடுத்துக்காட்டுக்களுடன் விவாதிக்குக. (30 புள்ளிகள்)